# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 20, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. 'முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீடு' திட்டத்தின்கீழ், இலவச மருத்துவக் காப்பீட்டுத் தொகை ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.25 லட்சமாக உயர்த்தப்படும் என்று முதல்வர் ச.ஜோசப் விஜய் அறிவித்தார்.

i. பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் ச. ஜோசப் விஜய் அறிவித்தார்.

ii. வடசென்னை மக்களுக்கு உயர் தர மருத்துவச் சேவை எளிதில் கிடைக்கும் வகையில், பெரம்பூரில் ரூ.300 கோடியில் 400 படுக்கைகள் கொண்ட உலகத் தரத்திலான பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும்.

iii. திருநங்கையர்களுக்கான மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை சேவைகள் கூடுதலாக சென்னை ஸ்டான்லி, திருநெல்வேலி, தூத்துக்குடி, செங்கல்பட்டு, திருவாரூர், தருமபுரி, கன்னியாகுமரி ஆகிய ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

iv. 7 புதிய அரசு செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, 660 பி.எஸ்சி. செவிலியர் மாணவர் இடங்கள் உருவாக்கப்பட்டு, ஏற்கெனவே உள்ள செவிலியர் கல்லூரிகள் மற்றும் செவிலியர் பள்ளிகளில் கூடுதலாக 1,925 மாணவர் இடங்கள், இயன்முறை மருத்துவம் உள்ளிட்ட 12 துணை மருத்துவப் படிப்புகளில் 2,778 மாணவர் இடங்கள், மருந்தியல் படிப்புகளில் 735 கூடுதல் இடங்கள் என மொத்தம் 6,098 கூடுதல் மாணவர்கள் இடங்கள் உருவாக்கப்படும்.

v. தமிழ்நாட்டில் அதிகரித்துவரும் புற்றுநோய்களைத் தடுக்கவும், தரமான சிகிச்சை வழங்கவும், 'முதல்வரின் புற்றுநோய் பராமரிப்பு இயக்கம்' ரூ.673.44 கோடியில் மேம்படுத்தப்படும். சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.471.80 கோடியில் தரைத்தளம் மற்றும் 14 தளங்களுடன் ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சை பிரிவு அமைக்கப்படும்.

- மேலும், 5 மண்டல புற்றுநோய் மையங்கள் தஞ்சாவூர், கோவை, மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம் ஆகிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நிறுவப்படும். முதல்கட்டமாக, மதுரை ராஜாஜி

மருத்துவமனையில் ரூ.84 கோடியில் தரைத்தளம் மற்றும் 8 தளங்களுடன் மண்டல புற்றுநோய் மையம் தொடங்கப்ப டும்.

- ரோபோடிக் அறுவை சிகிச்சை, லீனியர் அக்ஸிலிரேட்டர் கதிர்வீச்சு, நவீன கருவிகள், இலக்கு மற்றும் நோய் எதிர்ப்பு சிகிச்சைகளுக்காக, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூ.106.17 கோடி வழங்கப்படும்.

2. தமிழகத்தின் மேகமலை வனப் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை ஏற்கெனவே உத்தரவிட்டபடி விரைந்து அகற்றாவிட்டால் துணை ராணுவப் படையை அனுப்ப நேரிடும் என்று உச்சநீதி மன்றம் எச்சரித்தது.

i. மேலும், மேகமலை வனப் பகுதியில் இலவம் பஞ்சு சாகுபடி முழுமையாகக் கைவிடப்பட வேண்டும் என்றும் திட்டவட்டமாக தெரிவித்தது.

ii. தமிழ்நாட்டில் உள்ள காப்புக்காடுகள், வனவிலங்கு சரணாலயங்கள் மற்றும் புலிகள் காப்பகங்களைப் பாதுகாப்பது உள்ளிட்ட பிரச்னைகளை எழுப்பி தொடரப்பட்ட வழக்கு மீதான விசாரணை உச்சநீதி மன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் நடைபெற்றது.

iii. பின்னணி:

- தமிழகத்தின் 'களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்', 'ஸ்ரீவில்லிபுத்தூர் -மேகமலை புலிகள் காப்பகம்' மற்றும் 'கன்னியாகுமரி வனவிலங்கு சரணாலயம்' உள்ளிட்ட அகத்தியமலை நிலப்பரப்பின் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்தும் பெருகியும் வருகின்றன. இதுதொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், அகத்திய மலை சூழலியல் நிலப்பரப்பின் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் விவகாரத்தில் தொடரப்பட்ட வழக்கில், காலவரம்புக்கு உள்பட்டு ஆக்கிரமிப்புகளை அகற்றும் திட்டத்தைத் தயாரித்து முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்துமாறு மாநில அரசுக்கு கடந்த மே 29-ஆம் தேதி உத்தரவிட்டது. மேலும், ஆக்கிரமிப்பாளர்களாகக் கண்டறியப்பட்ட ஓய்வு பெற்ற மற்றும் பணியில் உள்ள 118 அரசு ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையையும், சட்ட நடவடிக்கையையும் தொடங்க வேண்டும் என்றும் உச்சநீ திமன்றம் உத்தரவிட்டது.

3. சர் வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ஐசிசி) தலைவர் டோமோகோ அகானே, மூத்த வழக்குரைஞர் அப்துலே சே ஆகியோர் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.
   i. உறுப்பு நாடுகள் அல்லாத அமெரிக்கா, இஸ்ரேல் ராணுவ வீரர்களை விசாரிக்க முற்படுவதாகக் கூறி விதிக்கப்பட்டுள்ள இத்தடையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கண்டித்துள்ளது. மேலும், இது நீதிமன்ற சுதந்திரத்தின் மீதான தாக்குதல் என்றும், சட்டத்தின் ஆட்சியைப் பலவீனப்படுத்தும் செயல் என்றும் விமர்சித்துள்ளது.
   ii. சர்வதேச நீதிமன்றத்தை முடக்கும் நோக்கில் விரிவான பிரசாரத்தை அமெரிக்கா முன்னெடுத்துள்ளதுடன், அதன் 125 உறுப்பு நாடுகளை விலகுமாறும் அழுத்தம் கொடுத்து வருகிறது. இதுவரை 9 நீதிபதிகள் உள்பட பல முக்கிய ஐசிசி அதிகாரிகளுக்கு அமெரிக்கா தடைவிதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

4. அண்டை நாடான வங்கதேசத்தில் அதிபர் தேர்தலின் வாக்குப்பதிவு வியாழக்கிழமை (ஆக. 20) நடைபெறவுள்ளது.
   i. முகமது முன்னாள் அதிபர் ஷஹாபுதீன் உடல்நலக் குறைவு காரணமாக கடந்த மாதம் திடீரென ராஜிநாமா செய்ததையடுத்து, புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறுகிறது.
   ii. ஆளும் - வங்கதேச தேசியவாத கட்சியின் (பிஎன்பி) சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலர் மிர்சா ஃபக்ருல் இஸ்லாம் ஆலம்கீர் (78) போட்டியிடுகிறார்.
   iii. இவரை எதிர்த்து பிரதான எதிர்க்கட்சியான ஜமாத்- ஏ- இஸ்லாமி தலைமையிலான கூட்டணிசார்பில், விடுதலை ஜனநாயகக் கட்சியின் (எல் டிபி) தலைவர் ஒலி அகமது களமிறக்கப்பட்டுள்ளார்.
   iv. நாடாளுமன்ற வளாகத்தில் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை நடைபெறும் வாக்குப் பதிவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்து, அதிபரைத் தேர்ந் தெடுப்பர்.
   v. வங்கதேசத்தில் 35 ஆண்டுகளுக்குப் பிறகு அதிபர் பதவிக்கு வாக்குப்பதிவு மூலம் தேர்தல் நடை பெறுவது இதுவே முதல் முறையாகும்.
   vi. தற்போது நாடாளுமன்றத்தில் பிஎன்பி-க்கு மூன்றில் 2 பங்கு பெரும்பான்மை இருப்பதால், மிர்சா ஃபக்ருல் எளிதில் வெற்றி பெற்று, வங்கதேசத்தின் 23-ஆவது அதிபராகப் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

5. கனடாவின் இறக்குமதி பொருள்கள் மீது விதிக்கப்பட்ட 50 சதவீத வரியை 3 நாள்களுக்குத் தற்காலிகமாக ஒத்தி வைப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார்.
   i. கனடாவின் 2,000 கோடி டாலர் மதிப்பிலான பொருள்களைப் பாதிப்புக்குள்ளாக்கக்கூடிய இந்த வரி விதிப்பு செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரவிருந்த நிலையில், இரு நாடுகளுக்கும் இடையே இறுதி நேரத்தில் எட்டப்பட்ட உடன்பாட்டையடுத்து ஒத்திவைக்கப்பட்டது.
   ii. அமெரிக்காவில் வரும் நவம்பரில் நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இப்புதிய வரி விதிப்புகளால் ஏற்படும் விலையுயர்வு மக்களிடையே அதிருப்தி ஏற்படும் அபாயத்தை டிரம்ப் நிர்வாகம் உணர்ந்துள்ளது. அமெரிக்க பொருள்கள் மீது பதிலடி வரி விதிக்கப்படும் என கனடா எச்சரித்திருந்தாலும், கடந்த ஆண்டு கனடாவின் மொத்த சரக்கு ஏற்றுமதியில் சுமார் 72 சதவீதம் அமெரிக்காவுக்கே நடந்துள்ளது. அந்தவகையில், இரு நாடுகளுமே இந்த வர்த்தகப் போரிலிருந்து பின்வாங்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தன.

6. இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியா 165 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலமாக, 2 ஆட்டங்கள் கொண்ட தொடரில் முன்னிலை பெற்றது. சர்வதேச டெஸ்ட்டில் இந்தியாவுக்கு இது 600-ஆவது ஆட்டமாக இருக்க, அந்த மைல்கல்லை வெற்றியுடன் கடந்திருக்கிறது இந்தியா.

7. நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்களை அமல்படுத்துவதற்காக உருவாக்கப்படும் துணை விதிகள் குழுவை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா மறுசீரமைத்துள்ளார்.
   i. இது தொடர்பாக மக்களவைச் செயலகத்தின் ஆகஸ்ட் 17-ஆம் தேதியிட்ட செய்திக்குறிப்பின்படி, 'துணை விதிகளுக்கான நாடாளுமன்ற குழுவின் புதிய தலைவராக ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் மக்களவைத் தொகுதி ஜனசேனை கட்சி எம்.பி. வல்லபனேனி பால ஷௌரி நியமிக்கப்பட்டுள்ளார்.
   ii. முக்கிய உறுப்பினர்கள்:
      - பல்வேறு முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். குறிப்பாக, தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.

கார்த்தி சிதம்பரம், திமுக எம்.பி. ஆ. ராசா குழுவில் இடம்பெற்றுள்ளனர். மேலும், நாடாளுமன்றத்தில் ஆளும் பாஜகவுக்கு எதிராக அவைக்குள் கடுமையாக குரல் கொடுப்பவர்களாக அறியப்படும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த மஹுவா மொய்த்ரா (திரிணமூல் காங்கிரஸ்), கேரளத்தைச் சேர்ந்த என்.கே. பிரேமச்சந்திரன் (புரட்சிகர சோசலிச கட்சி), பிகாரைச் சேர்ந்த முகமது ஜாவேத் (காங்கிரஸ்) ஆகியோரும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆளும் கட்சியான பாஜக சார்பில் தெலங் கானாவை சேர்ந்த மேதக் தொகுதி எம்.பி. மாதவனேனி ரகுநந்தன் ராவ், பிகாரைச் சேர்ந்த நவேடா தொகுதி எம்.பி. விவேக் தாக்குர் ஆகி யோரும், கூட்டணி கட்சிகள் சார்பில் ஆந்திரத்தில் தெலுங்கு தேசம், பிகாரில் ஐக்கிய ஜனதா தளம், லோக் ஜன சக்தி (ராம் விலாஸ் பாஸ் வான்), எதிர்க்கட்சியான சமாஜவாதி கட்சி ஆகியவற்றில் இருந்து தலா ஒருவரும் குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 பேர் இடம்பெற வேண்டிய இக்குழுவில் மூன்று இடங்கள் காலியாக உள்ளன.

iii. குழுவின் பணி:

- நாடாளுமன்றத்தின் மிக முக்கியமான குழுக்களில் துணை விதிகள் குழுவும் ஒன்று. நாடாளுமன்றத்தால் சட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அல்லது அரசமைப்பால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் வரம்புக்குள்பட்டே மத்திய அமைச்சகங்கள் விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் துணை விதிகளை உருவாக்குகின்றனவா என்பதை விரிவாக ஆய்வு செய்து மக்களவைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதே இக்குழுவின் முதன்மை நோக்கமாகும்.

## 8. இந்தியப் பிரதமரின் 13-வது சுதந்திர தின உரை: ஐந்து முக்கியச் செய்திகள் மற்றும் எதிர்காலத்திற்கான ஏழு இலக்குகள்.

i. இந்தியாவின் முன்னேற்றம்: 1947 மற்றும் 2026-க்கு இடையிலான ஒப்பீடு

சுதந்திரம் அடைந்ததிலிருந்து பல்வேறு சமூக-பொருளாதாரக் குறியீடுகளில் நாடு மகத்தான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது:

- 1947 முதல், இடைக்காலப் பிரதமர் குல்சாரிலால் நந்தா உட்பட 15 பிரதமர்கள் இந்தியாவை வழிநடத்தியுள்ளனர்; இதில் ஜவஹர்லால் நேரு மற்றும் நரேந்திர மோடி ஆகியோர் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியப்

பங்காற்றியுள்ளனர்.

- மக்கள் தொகை 1947-ல் 38 கோடியாக இருந்த நிலையில், 2026-ல் 140 கோடியாக உயர்ந்துள்ளது. அதே வேளையில், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் விகிதம் 80%-லிருந்து வெறும் 11%-ஆகக் குறைந்துள்ளது.
- கல்வியறிவு விகிதம் 18.3%-லிருந்து 80%-ஆக உயர்ந்துள்ளது; சராசரி ஆயுட்காலம் 32 ஆண்டுகளிலிருந்து 72 ஆண்டுகளாக, அதாவது இருமடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 1947-ல் வெறும் 30 பில்லியன் டாலராக இருந்த நிலையில், இன்று கிட்டத்தட்ட 4 டிரில்லியன் டாலராக வளர்ந்துள்ளது.
- மின் உற்பத்தித் திறன் 1,362 மெகாவாட்டிலிருந்து (MW) பல மடங்கு உயர்ந்து, இந்தியா உலகின் முன்னணி மின் உற்பத்தி நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இன்று, இந்தியா 100 கோடிக்கும் அதிகமான இணையப் பயனர்களைக் கொண்டுள்ளதுடன், உலகின் மொத்த டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் கிட்டத்தட்ட 40%-ஐக் கொண்டுள்ளது.

ii. ஐந்து முக்கியச் செய்திகள் ("News 5")

செங்கோட்டையில் ஆற்றிய உரையில், பிரதமர் ஐந்து முக்கியமான கட்டமைப்பு மற்றும் அரசியல் சார்ந்த செய்திகளை வலியுறுத்தினார்:

- இந்தியா ஒரு பொருளாதார சக்தியாக மட்டுமல்லாமல், தவிர்க்க முடியாத மற்றும் அவசியமான உலகளாவிய சக்தியாகவும் எழுச்சி பெற்று வருகிறது.
- மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளுக்காக இறக்குமதியைச் சார்ந்திருப்பதை ஒழித்து, நாடு முழுமையான தன்னிறைவை அடைய வேண்டும்.
- நவீன மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்கள் இந்திய இளைஞர்களுக்கு எளிதாகக் கிடைப்பதை உறுதி செய்தல்.
- வன்முறை மற்றும் "நகர்ப்புற நக்சல்" (urban Naxal) சித்தாந்தங்களின் பரவல் உள்ளிட்ட உள்நாட்டுப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு களைதல்.
- நம்பிக்கை, தன்னிறைவு மற்றும் வளர்ச்சியை உருவாக்குவதற்குப் பதிலாக, அச்சம் மற்றும் எதிர்மறையான விமர்சனங்கள் மூலம் நாட்டை

பலவீனப்படுத்தும் எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை விமர்சித்தல்.

iii. ஏழு முக்கிய இலக்குத் துறைகள் ("Targets 7" / சப்த தாரா)

வளர்ச்சியடைந்த நாட்டை உருவாக்க, அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியா தனது முயற்சிகளைச் செலுத்த வேண்டிய முக்கியத் துறைகளாகப் பிரதமர் "சப்த தாரா" (ஏழு நீரோடைகள்) என்பதை வரையறுத்தார்:

- உற்பத்தித் துறை
- விவசாயத் துறை
- தொழில்நுட்பம்
- உள்கட்டமைப்பு
- பாதுகாப்பு மற்றும் தற்காப்பு
- பசுமை மற்றும் கடல்சார் பொருளாதாரம்
- மென்பொருள்

9. சில ஆண்டுகளுக்கு முன்பு பொதுமக்களுக்குப் பெரிதாகத் தெரியாத 'டிஜிட்டல் கைது' (digital arrest) முறை, தற்போது இணையவழி மோசடிகளின் ஒரு முக்கிய மற்றும் புதிய வடிவமாக வேகமாக உருவெடுத்துள்ளது.

i. அதிகரித்து வரும் போக்கு மற்றும் தற்போதைய புள்ளிவிவரங்கள்

- இந்திய சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையத்தால் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின்படி, டிஜிட்டல் கைது மோசடி தொடர்பான புகார்கள் 2024-ல் 1.23 லட்சத்திற்கும் அதிகமாக இருந்த நிலையில், 2025-ல் சுமார் 58,000 ஆகவும், 2026 ஜூன் மாத இறுதியில் சுமார் 16,000 ஆகவும் குறைந்துள்ளன.
- ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம், 36,000-க்கும் மேற்பட்ட வழக்குகளில் ரூ.18.05 கோடி மீட்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது. வழக்குகளின் எண்ணிக்கை குறைவது ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் பலனளிக்கின்றன என்பதைக் காட்டினாலும், இப்பிரச்சனை முழுமையாகத் தீர்க்கப்பட்டுவிட்டது என்று அர்த்தமல்ல.

ii. மோசடி செய்யும் முறை மற்றும் நிஜ உலகத் தாக்கம்

- பெரும்பாலான டிஜிட்டல் கைது மோசடிகள் மேம்பட்ட கணினித் திறன்களால் அல்லாமல், மனித உளவியலைக் கையாள்வதன் மூலமே வெற்றி பெறுகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் தர்க்கரீதியாகச்

சிந்திப்பதைத் தடுக்கும் வகையில், மோசடி செய்பவர்கள் பயம், அதீத அவசரம் மற்றும் அதிகாரத் தோரணை கொண்ட சூழலை உருவாக்குகிறார்கள்.

- சமீபத்தில் நடந்த ஒரு முக்கிய வழக்கில், ஹரியானாவைச் சேர்ந்த முதிய தம்பதியினர் ரூ.1.05 கோடி வரை ஏமாற்றப்பட்டனர். குற்றவாளிகள் பல்வேறு அரசு அமைப்புகளின் அதிகாரிகளாக வேடமணிந்து, போலி ஆவணங்கள் மற்றும் வீடியோ அழைப்புகளைப் பயன்படுத்தி அவர்களை ஏமாற்றினர். வயது, கல்வி அல்லது தொழில் எதுவாக இருந்தாலும் யார் வேண்டுமானாலும் இதில் பாதிக்கப்படலாம் என்பதற்கு இது ஒரு வலுவான எச்சரிக்கையாக அமைகிறது.
- பாதுகாப்பிற்கான முக்கிய விதி: பொது விழிப்புணர்வே மிக வலிமையான கவசமாகும். எந்தவொரு அரசு அமைப்பும் வீடியோ அழைப்பு மூலம் ஒருவரைக் கைது செய்யாது அல்லது சட்ட நடவடிக்கையைத் தவிர்க்கப் பணம் கோராது என்பதை நினைவில் கொள்வது மிக அவசியம்.

iii. அமைப்பு ரீதியான நடவடிக்கைகள் மற்றும் நிதிசார் கட்டுப்பாடுகள்

- வங்கிகள், ஒழுங்குமுறை அமைப்புகள், புலனாய்வு அமைப்புகள், தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பத் தளங்கள் ஆகியவற்றுக்கு இடையே ஒரு கூட்டுச் செயல்பாட்டு அமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. குறைதீர்க்கும் அமைப்பு தற்போது 69 வங்கிகளின் 1.23 லட்சத்திற்கும் மேற்பட்ட கிளைகளை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- சந்தேகத்திற்குரிய வங்கிக் கணக்குகளிலிருந்து வெளியேறும் நிதியை உடனடியாகவும் தற்காலிகமாகவும் முடக்குவதற்கான ஒரு சீரான மற்றும் விரைவான நடைமுறையை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருடப்பட்ட பணம் சில நிமிடங்களிலேயே பல கணக்குகளுக்கு மாற்றப்படுவதால், பரிவர்த்தனைகளைத் தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்துவது பாதிக்கப்பட்டவர்களின் பணத்தை மீட்பதற்கு மிக முக்கியமானது.
- எல்லைகளற்ற டிஜிட்டல் குற்றங்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில், உள்ளூர் அளவிலான சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையங்களை முழுமையாகச் செயல்பாட்டிற்குக் கொண்டுவரவும், மின்னணு முதல் தகவல் அறிக்கை (e-FIR) நடைமுறைகளை

விரிவுபடுத்தவும் மாநிலங்கள் பணியாற்றி வருகின்றன.

- நீதித்துறை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த, மீட்கப்பட்ட பணத்தை பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாகத் திரும்ப வழங்குவதற்கு முன்னுரிமை அளிப்பது அவசியமாகும்.

iv. உலகளாவிய முன்னுதாரணங்கள் மற்றும் பாடங்கள்

- சிங்கப்பூர்: வங்கிகள், தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மற்றும் அரசு முகமைகளுக்கு இடையே நிகழ்நேரத் தகவல் பரிமாற்ற முறையைப் பயன்படுத்துகிறது.
- ஆஸ்திரேலியா: அரசு, நிதி அமைப்புகள் மற்றும் சட்ட அமலாக்க முகமைகளுக்கு இடையே வலுவான மற்றும் கட்டமைக்கப்பட்ட ஒத்துழைப்பைப் பேணுகிறது.

v. எதிர்காலப் பாதை

- பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான எதிர்கால முயற்சிகள், தனிநபர் தனியுரிமை, சட்ட நடைமுறைகள் மற்றும் முறையான தகவல் பரிமாற்றம் ஆகியவற்றைத் தொடர்ந்து மதிக்க வேண்டும்.
- தொழில்நுட்பம் வளரும்போது, சைபர் குற்றங்களும் தொடர்ந்து தங்கள் வடிவத்தை மாற்றிக்கொண்டே இருக்கும். இப்புதிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள, குற்றவாளிகளை விட மிக வேகமாகத் தேசியப் பாதுகாப்பு அமைப்புகள் தங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். உண்மையான பாதுகாப்பான 'டிஜிட்டல் இந்தியா' என்பது பொறுப்பான நிறுவனங்கள், விழிப்புணர்வுள்ள குடிமக்கள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு ஆகிய மூன்றின் ஒருங்கிணைந்த செயல்பாட்டைச் சார்ந்திருக்கிறது.